1986 மே 6]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, விசைத்தறிகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கு மட்டுமல்ல, ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு தான் இருக்கலாம் என்று சொல்வதற்கு மாநில அரசிற்கு தற்போது அதிகாரம் இல்லை. அதனால் தான் புரட்சித் தலைவர் அரசு மத்திய அரசிற்கு, விசைத்தறிக்கான உரிமங்களை வழங்குவதற்கும், அவைகளை விஸ்தரிப்பதற்காகவும் இருக்கின்ற அதிகாரத்தை மாநில அரசுக்குத் தரவேண்டுமென்று எழுதியிருக்கிறது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய புதிய ஜவுளிக் கொள்கை கைத்தறி நெசவாளர்களைப் பெரிதும் பாதிப்பதால், இந்த மன்றத்திலே ஒரு தீர்மானத்தைப் போட்டு நிறைவேற்றவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி சொன்னார்கள். மத்திய அரசு புதிய ஜவுளிக் கொள்கை கைத்தறி நெசவாளர்களை பாதிக்கிறது, ஆகவே அதை ரத்து செய்ய வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை அரசு நிறைவேற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, புதிய ஜவுளிக் கொள்கை என்பது அதை அறிவிக்கின்றபோது கொஞ்சமாக சில பாராக்களிலே சொன்னார்கள். ஆனால் நாள் ஆக, ஆக, ஆலைகளுக்கும், விசைத் தறிகளுக்கும், கைத்தறிக்கும் மேலும், மேலும் பல சலுகைகளை அறிவித்து இருக்கிறார்கள். இறுதியான புதிய ஜவுளிக் கொள்கை எது என்று கண்டுபிடித்த பிற்பாடு இதுபற்றி நாம் யோசிக்கலாம்.

நெல்லை, குமரி மாவட்டங்களில் கைத்தறி உதவி இயக்குநர்கள்.

682—(* வினா எண் 8009) **திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி, குமரி மாவட்டங்களுக்கு கைத்தறி துறைக்கு தனித்தனியே உதவி இயக்குநர்கள் நியமிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விபரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: (அ) ஆம்.

[1986 மே 6

(ஆ) திருநெல்வேலி சரகத்தை இரண்டாகப் பிரித்து, திருநெல்வேலி மாவட்டத்திற்கு திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு தனியாக ஒரு கைத்தறி மற்றும் துணிநூல் துறை சரக உதவி இயக்குநர் அலுவலகம், நாகர்கோவிலை தலைமையிடமாகக் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தனியாக ஒரு கைத்தறி மற்றும் துணிநூல் துறை சரக உதவி இயக்குநர் அலுவலகமும் ஏற்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கைத்தறித் துறையினுடைய வளர்ச்சியைக் கருதி ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் அமைப்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியமைக்காக கன்னியாகுமரி மாவட்டக் கைத்தறி நெசவாளர்களின் சார்பாக என்னுடைய நன்றியை நான் இப்போது தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாகத் தொடங்கவுள்ள உதவி இயக்குநர் அலுவலகம் இந்த ஆண்டு, அதாவது நடப்பு நிதியாண்டில் குமரி மாவட்டத்திற்கு தனியாக உதவி இயக்குநர் அலுவலகம் தொடங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலேயே வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கைத்தறித் துணிகள் தேக்கம் எவ்வளவு? தேக்கத்தினுடைய காரணமாக பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கக் கடன்களை ரத்துச் செய்யும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா? சொந்தத் தறி இல்லாத நெசவாளர்களுக்கு உதவிட தொழில் இயல் கூட்டுறவுச் சங்கங்கள் ஏதேனும் அமைக்கும் நோக்கம் உண்டா? என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1986 மே 6]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனியாக வினா போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறிகளுக்குத் தேவையான நூல்

683—(* வினா எண் 8991) திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கைத்தறி துணி தயாரிக்கத் தேவைப் படும் நூல் அவ்வளவும் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலையால் விநியோகிக்கப்படுகிறதா ?

(ஆ) கூட்டுறவு நூற்பாலை தயாரிக்கும் நூலின் தரம், விலை வெளி மார்க்கெட்டில் உள்ளதை விட குறைவாக இருக்கிறதா ? அதிகமாக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கூட்டுறவு நூற்பாலை தயாரிக்கும் நூலின் தரம் நன்றாக இருக்குமாறு, பல வகையில் பரிசோதிக்கப்பட்டு, பிற்பாடுதான் மார்க்கெட்டிற்கு விற்க அனுமதிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கூட்டுறவு நூற்பாலைகளிலும் தயாரிக்கப்படுகிற நூலுக்கு இந்தியத் தரக்கட்டுப்பாட்டினுடைய முத்திரை போடப்படுகிறது. வெளி மார்க்கெட்டிலுள்ள விலையை விட சற்றுக் குறைவாகவே கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்து, கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகிக்கும் நூலின் விலை இருக்கிறது.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலையினுடைய விலைக்கும், கைத்தறி நெசவாலைகளுடைய விலைக்கும் மாறுபாடு இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இந்த மாறுபாடே இல்லாமல் ஒரே விலையாக நிர்ணயிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.